பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

12 01 2025 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான இளம் தலைவர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று கலந்துரையாடுகிறார்.

- இந்தியாவின் எதிர்காலத்தை தீர்மாணிக்க கட்டமைப்பு வசதி மற்றும் உற்பத்தி துறையில் அதிக முதலீடு செய்வது அவசியம் என மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தியுள்ளார்.

- பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னையில் இந்த ஆண்டு 18 இடங்களில் ‘சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா’ நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

- கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் இளைஞர்களின் திறமையை வெளிக்கொண்டு வர உதவுவதாக இந்திய ஒலிம்பிக் சங்க தலைவர் திருமதி பி.டி. உஷா கூறியுள்ளார்.

- இங்கிலாந்துக்கு எதிரான ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் 15 உறுப்பினர்கள் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான இளம் தலைவர்கள் கலந்துரையாடல், நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் இளைஞர்களை ஈடுபடுத்துவதற்கான ஒரு தனித்துவமான நடவடிக்கை என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் தினத்தையொட்டி, புதுதில்லியில் இன்று சுமார் மூவாயிரம் இளம் தலைவர்களுடன் பிரதமர் கலந்துரையாட உள்ளார்.

இதையொட்டி மத்திய இளைஞர் நலத்துறை இணையமைச்சர் திருமதி **Raksha Khadse** வெளியிட்டுள்ள கட்டுரையைப் பகிர்ந்துள்ள பிரதமர், இந்த கலந்துரையாடல் இளைஞர்களின் திறமை, படைப்பாற்றல் மற்றும் தலைமைப் பண்பை நல்வழிப்படுத்தி வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான தொலைநோக்கை அடைய உதவும் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இந்தியாவின் எதிர்காலத்தை தீர்மாணிக்க கட்டமைப்பு வசதி மற்றும் உற்பத்தி துறையில் அதிக முதலீடு செய்வது அவசியம் என மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தியுள்ளார்.

புனேயில் பொருளாதார கொள்கை தொடர்பான நிகழ்ச்சியில் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க இந்த நான்கு அம்சங்களிலும் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றார்.

தொலைதொடர்பு துறையில் மத்திய அரசு மேற்கொண்ட வளர்ச்சித் திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

புனே நகரில் புதிய ரயில் நிலையங்கள் அமைக்கப்படுவதுடன் ரயில் சேவையை மேம்படுத்தி கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படுவதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னையில் இந்த ஆண்டு 18 இடங்களில் ‘சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா’ நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதாக செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

இதற்கான இடங்களை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னை கீழ்ப்பாக்கத்தில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் நாளை இந்த நிகழ்ச்சிகளை தொடங்கி வைக்க இருப்பதாக கூறினார்.

நாளை மறுநாள் முதல் 17ஆம் தேதி வரை நான்கு நாட்கள் நடைபெற உள்ள இந்த நிகழ்ச்சியில் சுமார் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட கிராமிய கலைஞர்கள் 50க்கும் மேற்பட்ட கலைநிகழ்ச்சிகளை நடத்த இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சென்னையைத் தொடர்ந்து இந்த ஆண்டு கோவை, மதுரை, திருச்சி, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் வேலூர் ஆகிய 8 நகரங்களிலும் சங்கமம் நிகழ்ச்சிகள் நடத்தப்பட இருப்பதாக திரு. சாமிநாதன் தெரிவித்தார்

<<<<>>>>

காட்டு யானையை கும்கி யானையாக மாற்றுவது மற்றும் பராமரிப்பது குறித்து நீலகிரி மாவட்டம் முதுமலையில் மகாராஷ்டிர மாநில யானைப் பாகன்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்தப் பயிற்சி இரண்டு கட்டங்களாக நடத்தப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு காஞ்சிபுரத்தில் மண் பானை விற்பனை மும்முரம் அடைந்துள்ளது.

ஒரு பானை 30 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை விற்பனையாவதால் வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

<<<<>>>>

கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் இளைஞர்களின் திறமையை வெளிக்கொண்டு வருவதற்கான வாய்ப்பாக அமைந்துள்ளது என இந்திய ஒலிம்பிக் சங்க தலைவர் திருமதி பி.டி. உஷா கூறியுள்ளார்.

மதுரையில் தனியார் பள்ளி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விளையாட்டுத் திறமை பள்ளிப் பருவத்தில் இருந்தே உருவாகும் என்றார்.

தாம் படித்த பள்ளியில் தமக்கு அளித்த ஊக்கம் காரணமாகத்தான் தமது விளையாட்டுத் திறமையை வளர்த்துக்கொள்ள முடிந்ததாக அவர் கூறினார்.

மத்திய அரசு விளையாட்டுத் துறைக்கு அளித்து வரும் ஊக்கம் காரணமாக, தற்போது ஏராளமானோர் சாதனை படைத்து வருவதாக திருமதி பி.டி. உஷா தெரிவித்தார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பங்களாதேஷில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இருந்து சிறுபான்மையினருக்கு எதிரான ஆயிரத்து 769 தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதாக அந்நாட்டின் இந்து பௌத்த மற்றும் கிறிஸ்தவ ஐக்கிய கவுன்சில் தெரிவித்துள்ளது.

------------

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் சுற்றுவட்டாரத்தில் மேலும் 2 இடங்களில் காட்டுத் தீ பரவியுள்ளது.

மும்பை மலாட் பகுதியில் கட்டப்பட்டுள்ள **T** வடிவ மேம்பாலத்தை மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் நேற்று திறந்து வைத்தார்.

------------

புதுதில்லியில் நடைபெற உள்ள குடியரசு தின அணிவகுப்பை பார்வையிட மும்பையைச் சேர்ந்த 5 சாதனையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

------------

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நாளை தொடங்க உள்ளகும்பமேளாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளது.

------------

போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு என்ற அலைபேசி சேவையை தலைமைச் செயலாளர் திரு. முருகானந்தம் தொடங்கி வைத்தார். இதற்கான இலட்சினையையும் அவர் அறிமுகப்படுத்தினார்.

------------

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 14 பேர் தமிழர்களின் பாரம்பரிய உடை அணிந்து முருகனுக்கு அரோகரா என்ற கோஷமிட்டபடி வழிபாடு செய்தனர்.

------------

மன்னார்குடி ராஜகோபால சுவாமி ஆலயத்தில் ராப்பத்து உற்சவத்தின் ஒரு பகுதியாக ஆண்டாள் அலங்காரத்தில் பெருமாள் அருள்பாலிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

------------

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெற்ற பொங்கல் விழாவில் மாணவிகள் பங்கேற்று கரகாட்டம், சிலம்பாட்டம் உள்ளிட்ட பாரம்பாரிய நிகழ்ச்சிகளை நடத்தினர்.

------------

தூத்துக்குடி மாவட்டத்தில் சிறப்பு பூஜை நடத்தி பணம் இரட்டிப்பாக்கி தருவதாகக் கூறி, சுமார் 2 கோடி ரூபாய் மோசடி செய்த தந்தை – மகன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

------------

திருவள்ளூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் அரசு திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து அம்மாவட்டத்திற்கான கண்காணிப்பு அலுவலர் திரு. அன்சுல் மிஸ்ரா நேற்று ஆய்வு செய்தார்.

------------

போலி **NRI** சான்றிதழ் சமர்ப்பித்து மருத்துவக் கல்லூரிகளில் சேர முயற்சித்தது தொடர்பாக குன்றத்தூரில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரி மற்றும் பயிற்சி மையங்கள் உள்ளிட்ட 8 இடங்களில் சென்னை மத்திய குற்றப்பிரிவு காவல்துறையினர் சோதனை மேற்கொண்டனர்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் குவஹாத்தியில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மோகன் பஹன் அணி - ஈஸ்ட் பெங்கால் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் மும்பை அணி - ஜம்ஷெட்பூர் அணியை எதிர்கொள்கிறது.

--------------

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியின் இன்றைய முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவில் சுமித் நாகல் - **Czchia**-வின் **Tomas Machac**-ஐ எதிர்கொள்கிறார்.

இந்தப்போட்டி காலை மணி 7.50க்கு தொடங்குகிறது.

--------------

இங்கிலாந்துக்கு எதிரான ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் 15 உறுப்பினர்கள் கொண்ட இந்திய அணியை, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்த அணியில் அக்ஷர் பட்டேல், முகமது ஷமி, சஞ்சு சாம்சன், வாஷிங்டன் சுந்தர் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

**<<<<tHE eND>>>>**